

## மஹாகவி சுப்ரமண்ய பாரதியார் அருளிய தேசபக்திப் பாடல் [பியாக் ராகம்]

**Mahakavi Subramanya Bharathiyar's national song in Hisdustani Piyaak raagam.**

பல்லவி
வந்தே மாதரம்! ஜெய வந்தே மாதரம்!
ஜய ஜய பாரத, ஜய ஜய பாரத, ஜய ஜய பாரத, ஜய ஜய பாரத
Vandhey maatharam! jeya vandhey maatharam
jeya jeya baaratha [4 times]

சரணங்கள்

ஆரிய பூமியில் நாரியரும் நர சூரியரும் சொல்லும் வீரிய வாசகம் [வந்தே]

Arya bhoome ill naariyarum nara suriyarum sollum veeriya vaasagam

நொந்தே போயினும், வெந்தே மாயினும், நம் தேசத்தர் உவந்தே சொல்வது [வந்தே]

nondhey poenum, wayndhey maayenum, nam dheysathar uvandhey solvadhu

ஒன்றாய் நின்றினி வென்றாயினும், உயிர் சென்றாயினும், வலி குன்றாது ஓதுவம் [வந்தே]

ondraai nindreni whendraaenum, uir sendraayenum, vali kundraadhu odhuvam

---